தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு என்.எல்.சி.யின் பங்குகள்!

தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த வெற்றி!!

தமிழக அரசின் பொதுத்துறை
நிறுவனங்களுக்கு
என்.எல்.சி யின் பங்குகள்!
தமிழ்நாட்டு மக்களுக்குக்
கிடைத்த வெற்றி!!

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.29

தமிழரசு

ஜூலை 2013

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
110, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனப் பங்குகளைத் திரும்பப் பெறாமலிருப்பதை உறுதிச் செய்ய வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர்
டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எழுதியுள்ள
23.5.2013 ஆம் நாளிட்ட நேர்முகக் கடிதத்தின் சாராம்சம்.

"**அ**ண்மைக்காலத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளவாறான, 1957 ஆம் ஆண்டு, பிணையங்கள், ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகளின் கீழ் செயற்கையாக முன்வைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைத் தேவைகளை ஏற்கும் வகையில், மத்திய அரசு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் தான் வைத்துள்ள சமவீதப் பங்குகளில் 5% தொகையைத் திரும்பப் பெறக் கருதியிருப்பதாக நான் அறிகிறேன்.

நீங்கள் அறிந்துள்ளவாறு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பெரிய அளவிலான மத்தியப் பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம், 17,500 தொழிலாளர்களுக்கும் மேற்பட்ட அளவில் வேலைவாய்ப்பு அளித்து, மாநிலத்தின் பின்தங்கிய மண்டலத்தில் அமைந்துள்ள பெரிய அளவிலான மத்திய மின் உற்பத்தித் தொழில் நிறுவனமாகும். இந்நிறுவனத்தில், மத்திய அரசு, சமபங்குத் தொகையில் ஒரு பகுதி தொகையைத் திரும்பப் பெறுவது தொடர்பாக எடுத்துள்ள முடிவு, நெய்வேலி

பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கிடையே ஓர் நியாயமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிக அளவிலான தொழிலாளர்களுக்கு மீண்டும் உறுதியளிப்பதற்குப் பதிலாக, உண்மை போன்ற அடிப்படையிலும், செயற்கையான ஒழுங்குமுறைத் தேவைகளின் அடிப்படையிலும், இந்த சமபங்குத் தொகைகள் திரும்பப் பெறப்படுவதை, சம்பந்தப்பட்ட அமைச்சகமும், நிறுவன நிருவாகமும் நியாயப்படுத்த முயன்று வருகிறது. சமபங்குத்தொகைகள் திரும்பப் பெறும் கருத்துருவை ஏற்பதற்குத் தொழிலாளர் சங்கங்களை அறிவுறுத்த வேண்டும் என்று, மாநில அரசின் ஒத்துழைப்புக் கோரப்பட்டு வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் எந்தவொரு பகுதியும் தனியார் மயமாக்கப்படுவதை என்னுடைய அரசு தொடர்ந்து வலுவலாக மறுத்து வருகிறது மற்றும் சமவீதப் பங்குத்தொகையைக் குறைக்காமல், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை ஓர் பொதுத்துறை நிறுவனமாகப் பராமரிக்க வேண்டும் என்பதே எங்களுடைய உறுதியான கருத்தாகும். 1957 ஆம் ஆண்டு பிணையங்கள், ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் அண்மைக்காலத்தில் செய்யப்பட்டுள்ள, ஒரு சில திருத்தங்களின் அடிப்படையில், மத்திய அரசு, ஓர் செயற்கையான ஒழுங்குமுறை இடர்ப்பாடுகளை உருவாக்க முயற்சிப்பதாக நான் இது தொடர்பாக அறிகிறேன். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில், மத்திய அரசு தான் வைத்திருக்கும் சமவீதப் பங்குத்தொகையைக் குறைப்பதற்கு இந்த விதிகளின் அடிப்படையில் மேற்கோள் காட்டுவது, பொருத்தமாகவோ அல்லது விரும்பத்தக்கதாகவோ இல்லை.

பங்குகளின் ஒரு சிறு பகுதியைக் கூட திரும்பப்பெறக் கருதினால், அதன் விளைவாகத் தொழிலாளர்களிடையே பெருமளவில் கொந்தளிப்பு ஏற்படும். தற்போது, தமிழ்நாட்டில் கடுமையான மின் பற்றாக்குறை

நிலவுவதால், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலிருந்து கிடைக்கிற மின்சக்தியில் ஏதேனும் தடை ஏற்படுமாயின், அது, மாநிலத்தின் நலனைக் கடுமையாகப் பாதிக்கும். எனவே, பங்குகளைத் திரும்பப் பெறக் கருதுகிற செயற்குறிப்புக்குப் பதிலாக, மாற்று வழிகளை ஆராயுமாறு நான் வன்மையாக வலியுறுத்துகிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் உள்ள பங்குகளில், மேலும் 5 சதவீதப் பங்குகளைத் திரும்பப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவிப்பது சரியானதல்ல. இரண்டு தெள்ளத் தெளிவான விருப்புரிமைகள் உள்ளன. தற்போது பொதுமக்களிடம் உள்ள 6.44 சதவீதப் பங்குகளை SEBI விதிமுறைகளின் கீழ் மீண்டும் வாங்குவதன் மூலம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், பட்டியலிலிருந்து நீக்கப்படலாம். இதற்கு மாற்றாக, 19(2) (c) விதியின் கீழ், தேவையான வரம்பு நிபந்தனை ஒன்றைக் கொண்டுவருவதன் மூலம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு சிறப்பு விதிவிலக்கு அளிக்கிற வகையில், 1957 ஆம் ஆண்டு பிணையங்கள் ஒப்பந்தங்கள் (முறைப்படுத்தல்) விதிகளில் திருத்தம் கொண்டு வரப்படலாம்.

இந்தச் சூழ்நிலைகளில், மத்திய அரசு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் வைத்துள்ள பங்குகள் மேற்கொண்டும் திரும்பப் பெறப்படாமலிருப்பதை அல்லது பங்குகளின் மதிப்பு படிப்படியாகக் குறைக்கப்படாமலிருப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இது தொடர்பாக விரைவில் பதில் அளித்தால், நான் மிகவும் நன்றி செலுத்துவேன்.

✶ ✶ ✶

நெய்வேலி என்.எல்.சி. நிறுவனத்தின் 5 சதவீதப் பங்குகளை விற்பனை செய்யும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் **டாக்டர் மன்மோகன்சிங்** அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் தமிழாக்கம் (22.6.2013)

என்.எல்.சி.எனப்படும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனப் பங்குகளை மத்திய அரசு விற்பனை செய்யும் பிரச்சினை குறித்து, நான் மீண்டும் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

என்.எல்.சி. நிறுவனத்தின் 5 சதவீதப் பங்குகளை விற்பனை செய்வது தொடர்பாக, கடந்த 8ஆம் தேதி தாங்கள் எழுதிய கடிதமும், இந்தப் பங்குகள் விற்பனைக்கு மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரக்குழு ஒப்புதல் வழங்கியதும் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், கவலையும் அளிக்கிறது.

தமிழக மக்களின் மிகவும் நியாயமான, உண்மையான கவலையை மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு அலட்சியப்படுத்துவதற்கு, இந்த நடவடிக்கை மேலும் ஒரு உதாரணமாக அமைந்துள்ளது. கடந்த மாதம் 23ஆம் தேதி நான் எழுதிய கடிதத்தில் என்.எல்.சி நிறுவனப் பங்குகளை விற்பனை செய்வதால் ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகளைச் சுட்டிக்காட்டியது மட்டுமல்லாமல், செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள சட்டச் சிக்கலைக் களைவதற்காக, மிகவும் சாத்தியமான 2 மாற்று வழிமுறைகளையும் நான் முன்வைத்தது குறித்தும் நினைவு கூர்ந்தேன்.

நான் தெரிவித்திருந்த 2 மாற்று வழிமுறைகளையும் மத்திய அரசு உரிய முறையில் பரிசீலனை செய்யாமல், அவற்றை நிராகரித்துள்ளது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. என்.எல்.சி. நிறுவனத்தின் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலன், தமிழக மக்களின் கவலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், நிதிச்சந்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை உணர்த்தும் வகையில் தங்களின் கடிதம் அமைந்துள்ளது எனக்கு அதிர்ச்சியளிக்கிறது.

மதிப்புக்கேற்ற வருவாய் கிடைக்குமா ?

என்.எல்.சி.நிறுவனம் ஒரு பொதுத்துறை நிறுவனம் என்ற அந்தஸ்து எந்தவிதத்திலும் பாதிக்கப்படாமல் அரசு நிறுவனம் என்ற அதே நிலையிலேயே அது நீடித்திருக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் விருப்பத்தைவிட, என்.எல்.சி. நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் 466 கோடி ரூபாய் நிதியை உடனடியாகத் திரட்டுவதற்குத்தான் மத்திய அரசு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தோன்றுகிறது.

அண்மைக்காலமாகப் பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், நவரத்தினா அந்தஸ்து பெற்றுள்ள இலாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனமான என்.எல்.சி. நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்ய முடிவெடுத்திருப்பது குறித்தும், இந்த விற்பனை மூலம் என்.எல்.சி. பங்குகளின் உண்மையான மதிப்புக்கேற்ற வருவாய் கிடைக்குமா ? ஒரு குடும்பத்தின் விலைமதிப்புள்ள நகைகளை மிகமிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வது போன்று மத்திய அரசு செயல்பட்டதாக வருங்காலத் தலைமுறை நினைத்துவிடக் கூடாது. என்.எல்.சி.பங்குகளை விற்பனை செய்யும் முடிவு, பின்விளைவுகள் குறித்து ஆராயாமல் எடுக்கப்பட்டுள்ளது.

பங்கு விற்பனை குறித்து தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர் அமைப்புகளுடன் என்.எல்.சி நிருவாகம் ஏற்கெனவே ஆலோசனை நடத்தியதாகத் தாங்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள்.

ஏறக்குறைய அனைத்துத் தொழிற்சங்கங்களும், என்.எல்.சி.பங்குகள் விற்பனை செய்யப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து, போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக, அறிவித்துள்ளதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மறுபரிசீலனை செய்ய வேண்டும்

பங்கு விற்பனை குறித்து முறையாக ஆராயாமல், அவசரக் கோலத்தில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு காரணமாக தொழிலாளர்களிடையே ஏற்படும் கொந்தளிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தமிழக அரசு தள்ளப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் மின்தட்டுப்பாட்டு நிலவரம் மேலும் சிக்கலாகும்.

பங்குச்சந்தை நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் அமைப்பான "செபி" வகுத்துள்ள விதிமுறைகள், வழிகாட்டி நெறிகளை மட்டுமே காரணம்காட்டி, என்.எல்.சி பங்குகள் விற்பனை விவகாரத்தை மத்திய அரசு கையாளக்கூடாது. இந்தப் பிரச்சினையின் ஒட்டுமொத்த விளைவுகளையும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

என்.எல்.சி.பங்குகள் விற்பனையைக் கைவிடுவதற்கு ஏதுவாக எனது முந்தையக் கடிதத்தில் நான் தெரிவித்திருந்த மாற்று வழிமுறைகள்குறித்து, தாங்கள் பரிசீலனை செய்வீர்கள் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

என்.எல்.சி நிறுவனத்தின் **5** சதவீதப் பங்குகளை விற்பனை செய்யும் முடிவை, தாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு உள்ள பொதுத்துறை நிறுவனம் என்ற அந்தஸ்து நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

✶ ✶ ✶

என்.எல்.சி.நிறுவனத்தின் 5 சதவீதப் பங்குகளை எந்தவொரு தனியார் நிறுவனத்திற்கும் விற்பனை செய்யக் கூடாது!

மாண்புமிகு பாரதப் பிரதமர் **டாக்டர் மன்மோகன்சிங்** அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், எழுதிய கடிதத்தின் தமிழாக்கம். (25.06.2013)

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலுள்ள மத்திய அரசின் சமவீதப் பங்குகளில், மேலும் 5 சதவீதத்தைத் தனியாருக்கு விற்பனை செய்வது என்ற பிரச்சினை பல்லாண்டு காலமாக நிலவி வந்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலுள்ள பங்குகளை, தனியாருக்கு விற்பனை செய்ய கருதுவதற்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து, தங்களுக்கு முந்தைய ஆட்சியில் இருந்த பிரதமருக்கு, நான், 22.4.2003 அன்று கடிதம் எழுதியிருந்தேன். தமிழ்நாட்டில், நான் எதிர்க்கட்சியில் இருந்தபோது, பங்குகளை, தனியாருக்கு விற்பனை செய்வதைத் தொடர்ந்து எதிர்த்து வந்தேன். பங்குகளை, தனியாருக்கு விற்பனை செய்யக் கருதியிருப்பதை மறு பரிசீலனை செய்யக் கோரி, நான் 23.5.2013 அன்று உங்களுக்கு மீண்டும் கடிதம் எழுதியிருந்தேன். பங்குகளை விற்பனை செய்யக் கருதிய முடிவினால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், சச்சரவு ஏற்படக்கூடிய வாய்ப்புகளையும் நான் கோடிட்டுக் காட்டியிருந்தேன். உருவாக்கப்பட்டுள்ள செயற்கையான ஒழுங்குமுறைப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு, சில மாற்று ஏற்பாடுகள் குறித்துப் பரிசீலிக்குமாறும் நான் கோரியிருந்தேன். பங்குகளை, தனியாருக்கு விற்பனை செய்வது குறித்து மறுபரிசீலனை

செய்ய இயலாது என்று குறிப்பிட்டு, நீங்கள், **8.6.2013** அன்று பதிலளித்திருந்தீர்கள்.

உணர்வுபூர்வமான பிரச்சினை

ஊடகங்களின் அறிக்கைகளின்படி, பொருளாதார விவகாரங்கள் குறித்த அமைச்சரவைக் குழுவும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலுள்ள பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்யக் கோருகிற கருத்துருவிற்கு கடந்த வாரம் அனுமதியளித்துள்ளது. இதைக் கேள்வியுற்றவுடன், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலுள்ள பங்குகளை, தனியாருக்கு விற்பனை செய்வதென எடுத்திருக்கும் முடிவு, தொழிலாளர்களின் சட்டப்படியான உரிமைகளை முற்றிலுமாகப் புறந்தள்ளி விடும் என்றும், தமிழ்நாட்டு மக்களின் ஆர்வத்தை மிதித்துத் துவைத்துவிடும் என்றும், மேலும் இது, தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் உள்ளத்தில் கவலையையும், நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்கியுள்ளது என்றும் தெரிவித்து, **22.6.2013** அன்று, நான், உங்களுக்கு மீண்டும், கடிதம் எழுதினேன். இது, மிகவும் உணர்வுபூர்வமான பிரச்சினையாக இருப்பதால், இது, பெரும்பாலும் அனைத்துத் தொறிற்சங்கங்களையும் கிளர்ந்தெழச் செய்துள்ளது. அவர்கள் மிகவும் புண்பட்ட உள்ளத்துடன், **3.7.2013** முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பு ஒன்றை அளிப்பது உட்பட கிளர்ச்சி ஒன்றை அறிவித்துள்ளனர்.

மின் உற்பத்தி பாதிக்கும்

இந்த வேலைநிறுத்தம் பரவி நீண்ட நாள் தொடருமேயானால், நெய்வேலியிலுள்ள மின்உற்பத்தி நிலையங்கள் மூடப்படும் என நான் அஞ்சுகிறேன். ஏற்கெனவே மின் பற்றாக்குறையால் தமிழ்நாடு

சிக்கித் தவிக்கின்ற வேளையில் இத்தகைய சூழல் மாநிலத்தின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிப்பதுடன் மக்களுக்கும் மிகுந்த இன்னல்களை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதென்ற முடிவினை மத்திய அரசு மீண்டும் கருதிப்பார்க்கும் என நான் இன்னும் எதிர்பார்க்கின்ற நிலையில், SEBI நிறுவனம் வரையறை செய்தவாறாக அண்மையில் திருத்தப்பட்ட ‘‘விற்பனை செய்வதற்கான ஒப்ப அறிவிப்பு’’ முறையில் பங்குகள் விற்பனை செய்யப்படலாம் என அச்சமேற்படுகிறது. இந்த முறையின் கீழ், ஒரே நாளில் அறிவிப்பு அளிப்பதன் பேரில் பங்குகள் விற்பனை செய்யப்படலாம்.

மத்திய அரசின் நேர்மையற்ற முடிவு

மத்திய அரசின் இத்தகைய நேர்மையற்ற முடிவு தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலையை கடுமையாகப் பாதிக்கும். எனவே, மிகவும் முக்கியமான மற்றும் உணர்வுப் பூர்வமான இந்தப்பிரச்சினையில் நீங்கள் அவசரகதியில் ஈடுபடவேண்டாம் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு, நவீன மற்றும் சாத்தியமான தீர்வு தேவைப்படுகிறது என நான் நம்புகிறேன். எனவே, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் 5 சதவீத மத்திய அரசின் பங்குகளை, தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் போன்ற தமிழ்நாடு அரசின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்படலாம் என நான் கருதுகிறேன். இத்தகைய உரிமைகள், 1957ஆம் ஆண்டு பிணைய ஒப்பந்த முறைப்படுத்தல் விதிகளின் 2(D) விதியின் கீழ் பொருள்

விளக்கம் அளிக்கப்பட்டவாறான “பொது” என்ற பொருளைக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பங்குகளை அளிப்பதானது, பிணைய ஒப்பந்தங்கள் (முறைப்படுத்தல்) விதிகளின் 19(2) மற்றும் 19Aஆம் விதிக்கு இணக்கமாக நெய்வேலி நிலக்கரி நிறுவனம் செயல்படும் என்பதை உறுதி செய்யும்.

செபி(SEBI) நிறுவனத்தால் ஒப்புதலளிக்கப்படும் யாதொரு முறையின் மூலமாக அல்லது நிறுவன ரீதியிலான ஏற்பாட்டுத் திட்டத்தின் மூலம் நேர்வின் அடிப்படையில் ஏனையவற்றிற்கிடையே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் வைக்கப்பட்டிருக்கும் பங்குகளை நீக்கப்படுவதற்கு அதன் வழிகாட்டிக் குறிப்புகளின் கீழ் வாய்ப்புள்ளது என்று நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு செபி (SEBI) நிறுவனம் முன்னர் சுட்டிக்காட்டியிருந்தது குறித்து நான் அறியப்பெற்றதால், இந்த நடைமுறையை செபி (SEBI) நிறுவனம் எளிதாக்க இயலும் என்று நான் கருதுகிறேன்.

மேலே குறிப்பிடப்பட்ட தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் “தகுதியுடைய நிறுவன ரீதியிலான வாங்குவோர்” (QIB’s) என்ற வரையறையின் கீழ் வருகிறது. எனவே, ஒரு நிறுவன ரீதியிலான ஏற்பாட்டுத் திட்டத்தின் கீழ், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை வாங்குவதற்குத் தகுதியுடையதாக இவை இருக்கும். தமிழ்நாட்டுப் பொதுத்துறை நிறுவனங்களுடன் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட வீதத்தில் அத்தகைய ஏற்பாட்டு முறையிலான பங்குகளுக்காக, சிறப்பு ஏற்பாட்டு முறையை வகுத்துக் கொடுக்குமாறு (SEBI) நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்படலாம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் "பொதுத்துறை நிறுவனம்" என்ற தனித்தன்மையைப் பாதுகாத்து நல்ல நிலையில் பேணுவதற்கும், அந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் மற்றும் அப்பகுதி மக்களின் அச்சத்தைத் தணிப்பதற்கும், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இந்த 5 விழுக்காடு பங்குகளை விற்பனை செய்யலாம் என நான் கருத்துத் தெரிவிக்கிறேன். இந்த சமவீதப் பங்குகளை ஏனைய யாதொரு தனியார் நிறுவனத்திற்கும் விற்பனை செய்ய வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது நான் தெரிவித்துள்ள இந்த மாற்றுக் கருத்துரு குறித்துத் தாங்கள் அனுகூலமாகக் கருதிப் பார்ப்பீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

✶ ✶ ✶

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு என்.எல்.சி. பங்குகளை விற்பனை செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர்
டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எழுதிய
கடிதத்தின் தமிழாக்கம் (07.07.2013)

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் (என்.எல்.சி.) தனது வசம் இருக்கும் பங்குகளில் மேலும் 5 விழுக்காட்டினைத் தனியாருக்கு விற்பது என்னும் இந்திய அரசின் முடிவு இன்று தமிழகத்தில் மிகவும் உணர்ச்சிகரமான பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. இந்தியப் பொதுத் துறை நிறுவனங்களில், நவரத்தின நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும் நிறுவனங்களில் மிகப் பெரிய நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள என்.எல்.சி.நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் 25,000த்திற்கும் மேற்பட்டோர் பணிபுரிகிறார்கள். தென்னகத்துக்குத் தேவையான 2,490 மெகாவாட் மின்சாரத்தை இந்நிறுவனம் உற்பத்தி செய்கிறது.

என்.எல்.சி.யின் பங்குகளை விற்பது என்னும் முடிவு ஊழியர்களின் மனங்களில் ஆழமான ஐயங்களை ஏற்படுத்தி, அவர்களிடையே பெரும் அமைதியின்மையை உருவாக்கியிருக்கிறது. என்.எல்.சி. பொதுத்துறை நிறுவனமாகவே நீடிக்க வேண்டும் என்னும் நிலைப்பாட்டினையே தமிழக மக்கள் உறுதியாக ஆதரிக்கிறார்கள்.

எனவே, இந்திய அரசின் பங்குகளை விற்கும் எந்த முடிவும் தமிழக அரசியல் கட்சிகளாலும், தமிழக அரசாலும் தொடர்ந்து எதிர்க்கப்பட்டு வருகிறது. பங்குகளை விற்பதை எதிர்த்து 22.4.2003 அன்றே அந்நாளைய பிரதமருக்கு நான் கடிதம் எழுதியிருந்தேன். அண்மையில் இந்தப் பிரச்சினை மீண்டும் எழுந்தபோது நான் 23.5.2013, 22.6.2013, 25.6.2013 ஆகிய தேதிகளில் தங்களுக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறேன். இந்தப் பிரச்சினை தமிழகத்திற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை இக்கடிதங்கள் உணர்த்துகின்றன.

தமிழக மக்களின் உணர்வு

1957ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டு, 2010இல் திருத்தப்பட்ட பங்குகள் ஒப்பந்த (ஒழுங்குமுறை) விதிகளின்படி பங்குகளை விற்பதற்கான அதிகார வரையெல்லைக்கான கட்டாயத் தேவைகள் என்று சொல்லப்படும் அளவுகோல்களின் அடிப்படையில் கூறப்படும் காரணங்கள் தவறானவை என்றும், செயற்கையாக உருவாக்கப்பட்டவை என்றும் நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன். இந்தச் சூழலை எதிர்கொள்ள நான் இரண்டு வழிகள் இருப்பதாகக் கருத்துரைத்தேன்.

ஒன்று, என்.எல்.சி.யின் பங்குகளைப் பொது மக்களிடமிருந்து திரும்ப வாங்கிக்கொண்டு அந்நிறுவனத்தைப் பங்கு வர்த்தகத்தின் பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டும் அல்லது, மேற்படிச் சட்டத்தைத் திருத்தி என்.எல்.சி.க்குச் சிறப்பு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். நடைமுறைக்குப் பொருத்தமான இந்த இரு தீர்வுகளையும் இந்திய அரசு நிராகரித்துவிட்டது. பங்குகளை மீண்டும் வாங்குவது நிதிச் சந்தையில் எதிர்மறையான அறிகுறிகளை அனுப்பிவிடக்கூடும் என்று எனக்கு எழுதிய ஜூன் 8, 2013 தேதியிட்ட பதில் கடிதத்தில் தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். நிதிச் சந்தைக்கு அறிகுறிகளை அனுப்புவது

ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலவாழ்வையும் தமிழக மக்களின் ஆழமான கவலைகளையும், ஐயங்களையும் காட்டிலும் முக்கியமானதாக இருப்பது நமக்கெல்லாம் பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக உள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தைப் பொதுத்துறை நிறுவனமாகவே தொடரச் செய்ய வேண்டும் என்னும் தமிழக மக்களின் உள்ளார்ந்த விருப்பத்தைவிடவும் என்.எல்.சி.யின் பங்குகளை விற்பதன் மூலம் உடனடியாகக் கிடைக்கக்கூடிய ரூ.466 கோடியை மேலானதாகக் கருதுவது மக்கள் உணர்வுக்கு மதிப்பளிக்காத இந்திய அரசின் மனப்போக்கையே காட்டுகிறது.

நிறுவனத்தின் பங்குகளை விற்பது என்னும் முடிவால் எழக்கூடிய தொழிலாளர் பிரச்சினைகள் குறித்தும், ஏற்கெனவே நலிந்த நிலையில் இருக்கும் மாநிலத்தின் மின்சக்தி உற்பத்தியின் மீது இத்தகைய முடிவு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைப் பற்றியும் கடந்த காலத்தில் பலமுறை உங்களது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். முந்தைய அரசின் தவறான அணுகுமுறையின் காரணமாக எனது தலைமையிலான அரசின் மீது திணிக்கப்பட்ட மின் பற்றாக்குறையினால் தமிழ்நாடு தற்சமயம் கடும் மின்சார நெருக்கடிக்கு உள்ளாகியது. எனது தலைமையிலான அரசு மாநிலத்தின் மின் பற்றாக்குறைக்குத் தீர்வு காணத் தன்னாலியன்ற அனைத்தையும் பல மாற்றங்களோடு திறம்படச் செயற்படுத்தி வருகிறது.

தூங்கிய நிலையில் முந்தைய அரசின் கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த மின்சக்தித் தேவையான 4,000 மெகாவாட் மின்சாரக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய முறையாகத் திட்டமிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்தி மேலும், புதிய மின்னுற்பத்தித் திட்டங்களைத் தொடங்கி எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. எனது நேரடி மேற்பார்வையின்கீழ் என் தலைமையிலான அரசு மேற்கொண்ட பல இடையறாத முயற்சிகளின்

காரணமாக 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையம், தலா 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் நிலையத்தின் இரண்டு பிரிவுகள் மற்றும் 600 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் நிலையத்திட்டப் பிரிவு–2 ஆகிய மின் நிலையங்கள் மின்னுற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இவற்றுடன் கூட அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு மின்சக்தி சிக்கன நடவடிக்கைகளினால் நல்ல முடிவுகள் எய்தியுள்ளன; வெகு விரைவில் தமிழ்நாடு தன் மின் பற்றாக்குறை நிலையிலிருந்து மீண்டு, தமிழக மக்களுக்கும் தொழிற்சாலைத் தேவைகளுக்கும் மின் உற்பத்தி நிலைமையை நிலைப்படுத்துவதற்கு தமிழக அரசு எனது தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது அனைவரும் அறிந்ததே.

எனது அரசு எடுத்த இமாலய முயற்சிகள் மாநிலத்தில் மின்சார நிலவரம் நிலையாகி, பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளையும் தாண்டி வந்திருக்கிறோம். இந்தச் சமயத்தில், என்.எல்.சி பங்கு விற்பனைப் பிரச்சினையில் இந்திய அரசு எடுத்த முற்றிலும் எதிர்பாராத நிலைப்பாடு காரணமாக நிச்சயம் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய வேலைநிறுத்தத்திற்கு இந்தப் பொதுத்துறை நிறுவனம் தள்ளப்பட்டிருக்கிறது. மாநிலத்தின் மின்சார இருப்பின் மீது கடுமையான தாக்கத்தைச் செலுத்துவதுடன் மின் பற்றாக்குறையை ஈடுகட்டப் பல வழிகளிலும் மாநில அரசு மேற்கொண்டுவரும் கடும் முயற்சிகளையும் இது பாதிக்கும். என்.எல்.சி. உற்பத்தி செய்யும் 2,490 மெகாவாட் மின்சாரத்தில் தமிழ்நாட்டிற்கான பங்கு 1,178 மெகாவாட் தற்போது தொழிலாளர் செய்து வரும் வேலை நிறுத்தத்தால் தமிழ்நாடு தனது பங்கை இழப்பதோடு, தென் மாநிலங்களுக்கிடையேயான மின் பகிர்மானத் திறன் பாதிப்பினால் கூடுதலாக 200 மெகாவாட் மின்சாரத்தையும் இழக்க வேண்டிவரும்.

இந்தப் போராட்டம் மேலும் நீடித்தால், தனது எரிபொருள் விநியோகத்திற்கு என்.எல்.சி.யை சார்ந்திருக்கும் தமிழ்நாட்டின் மின் உற்பத்திக்குப் பங்களித்துவரும் TAQA போன்ற தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு (IPP) பழுப்பு நிலக்கரி கிடைக்காமல் போகும். அதன் காரணமாக இவற்றின் மூலம் தமிழக அரசு பெற்றுவரும் 250 மெகாவாட் மின்சாரம் கிடைக்காமல் போகும். இந்தப் பற்றாக்குறைகள் கூடுதல் மின் வெட்டுக்கு அடிகோலும். இதனால் தமிழக மக்கள் பாதிக்கப்படுவார்கள். அது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தென் மாநிலங்களும் 2,500 மெகாவாட் மின் உற்பத்தி இழப்பால் பாதிக்கப்படும். தென் மாநில அரசுகளின் மின் நிருவாகமே கடுமையாகப் பாதிக்கப்படும்.

25 ஜுன் 2013 தேதியிட்ட எனது கடிதத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளில் இந்திய அரசுக்குச் சொந்தமான 5% பங்குகளை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) போன்ற தமிழகத்தின் பொதுத்துறை நிறுவனங்களில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்கு விற்பனை செய்யுமாறு தெளிவானதொரு யோசனையை நான் முன்வைத்திருந்தேன். இவை பங்குகள் வாங்குவதற்கான தகுதியைச் சட்டப்படி பெற்ற அமைப்புகள். இந்நிறுவனங்கள் 1957ஆம் ஆண்டின் பங்குகள் ஒப்பந்த (கட்டுப்பாடு) விதிகளில் குறிப்பிடப்பட்ட “பொது (பப்ளிக்)” என்னும் வரையின் கீழ் வருகின்றன. இந்தப் பொதுத் துறை நிறுவனங்களுக்குப் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் பங்குகள் ஒப்பந்த (ஒழுங்குமுறை) விதிகளின் விதி 19 (2) மற்றும் விதி 19Aவிற்கு இசைவானதாக இருப்பதையும் உறுதிபடுத்தும். 5 சதவீதப் பங்குகளை, அல்லது 10 சதவீதப் பங்குகளை (மொத்தப்

பங்குகளில் **3.56** விழுக்காடு) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்பதற்கான வழிகளை SEBIயால் எளிதில் கண்டறிய முடியும் என்பது தெளிவு. விற்றாக வேண்டிய குறைந்தபட்சப் பங்குகளை அவற்றுக்குண்டான சட்டப்பிரிவுகளின் கீழ், தமிழ்நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்பதற்கும் அதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்யுமாறு SEBIக்கு உத்தரவிடுவதற்குமான என் யோசனையை இந்திய அரசு உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்திய அரசு இவ்விஷயத்தில் தாமதிப்பது தமிழக மக்களைப் பெரும் துன்பத்தில் ஆழ்த்திவிடும். இதைத் தவிர்ப்பதற்காகத்தான் நான் என்.எல்.சி. பங்குகளைத் தனியாருக்கு விற்பதைத் தவிர்ப்பதற்கான நடைமுறை சாத்தியமுள்ள பல யோசனைகளை முன்வைத்திருக்கிறேன். இதனால் மாநில அரசுக்கு ஏற்படும் பெரும் செலவையும் பொருட்படுத்தாமல் இந்த யோசனையை நான் முன் வைத்திருக்கிறேன்.

எனவே, தமிழக மக்களைப் பாதிக்கக்கூடிய, முற்றிலும் தவிர்க்கக்கூடிய இந்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக நான் ஏற்கெனவே முன்வைத்துள்ள நடைமுறைச் சாத்தியமுள்ள யோசனைகளின் பின்னணியில் இந்தப் பிரச்சினையை முற்றிலும் புதிய பார்வையுடன் அணுகுமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

✶ ✶ ✶

என்.எல்.சி. பங்குகளைத் தமிழகம் வாங்குவது குறித்த பேச்சுவார்த்தை நல்ல முடிவை அளிக்கும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர்
டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எழுதிய
கடிதத்தின் தமிழாக்கம் (13.07.2013)

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில், மத்திய அரசுக்கு உள்ள பங்குகளில் மேலும் 5 சதவீதத்தை விற்பனை செய்வது தொடர்பாக, 12.07.2013 அன்று எழுதியிருந்த தங்களின் கடிதம் கிடைக்கபெற்றேன். என்.எல்.சி பங்கு விற்பனை தொடர்பாக, கடந்த மாதம் 25ஆம் தேதி தங்களுக்கு எழுதிய கடிதத்தில், நான் தெரிவித்திருந்த யோசனைகளுக்கும், நிறுவன ஒதுக்கீடுத் திட்டத்தில், விற்பனை செய்ய உத்தேசித்துள்ள பங்குகளை, தகுதிவாய்ந்த தமிழக பொதுத் துறை நிறுவனங்கள் வாங்குவது நடைமுறைக்கு சாத்தியம் என கடந்த 7ஆம் தேதியிட்ட கடிதத்தில், நான் வலியுறுத்தி இருந்ததற்கும், தாங்கள் சம்மதம் தெரிவித்துள்ளீர்கள்.

என்.எல்.சி. நிறுவனத்தில் மத்திய அரசுக்கு உள்ள பங்குகளில் ஒரு பகுதியை, தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு சாதகமான அம்சங்களைக் கண்டறிந்து, அடுத்த மாதம் 8ஆம் தேதிக்கு முன்பாக நிறைவு செய்யும் வகையில், அதற்கான நடைமுறைகளை இறுதி செய்வதற்காக, மூத்த அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு தமிழக அரசைத் தாங்கள் கேட்டிருந்தீர்கள். என்.எல்.சி பங்கு விற்பனை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவற்கு,

தமிழக அரசின் சார்பில், மூத்த அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு கோரி, மத்திய அரசின் பங்கு விலக்கல்துறைச் செயலாளர், கடந்த 6ஆம் தேதி தமிழகத் தலைமைச் செயலாளருக்குக் கடிதம் எழுதியிருந்தார். இதனையடுத்து, எனது உத்தரவின்பேரில், தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு, என்.எல்.சி பங்குகளை வாங்குவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரியாக, தமிழக நிதித்துறை முதன்மைச் செயலாளரை நியமித்து, தமிழக அரசுத் தலைமைச் செயலாளர், கடந்த 7ஆம் தேதி பதில் அனுப்பியுள்ளார்.

மத்திய பங்கு விலக்கல் துறைச் செயலாளரின் அழைப்பின் பேரில், தமிழக நிதித்துறை முதன்மைச் செயலாளர், திட்டம் மற்றும் மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொழில்துறை இணைச் செயலாளர் ஆகியோர் அடங்கிய தமிழக அரசின் உயர் அதிகாரிகள் குழு ஒன்றை, நான் நியமித்து , கடந்த 10ஆம் தேதியன்று, டெல்லிக்கு அனுப்பினேன். நிறுவன ஒதுக்கீடுத் திட்டத்தில் பங்கேற்பதற்கான தகுதி,என்.எல்.சி.பங்குகளை வாங்க தகுதிபடைத்த மாநில பொதுத்துறை நிறுவனங்களை அடையாளம் காண்பது, இதற்கு சாதகமான அம்சங்களை உறுதி செய்வதற்கு உரிய ஆவணங்களை தயாரித்தல், விலை நிர்ணயக் கொள்கைப் பங்குகளைப் பரிவர்த்தனை செய்யும் காலம் உள்பட, பங்குகளைத் தமிழக அரசு வாங்குவது தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்துத் தமிழக அதிகாரிகள் குழுவுடன் விரிவான ஆலோசனைகளை நடத்தியுள்ளேன்.

பங்குகள் பரிவர்த்தனை முதலீட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளின்படி, எவ்வளவு சதவீதப் பங்குகளை வாங்குவது என்பது குறித்தும், தமிழக அதிகாரிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர். என்.எல்.சி. நிறுவனத்தின் பங்குகளில், விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள 5 சதவீதப் பங்குகளை, முழுவதுமாகத் தமிழகப் பொதுத்துறை நிறுவனங்கள் வாங்குவதற்குத் தயார் என்று, ஏற்கெனவே கடந்த 7ஆம் தேதியிட்ட கடிதத்தில் நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

பொதுமக்களின் பங்காக 10 சதவீதம் இருக்க வேண்டும் என்ற பங்குப்பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு வாரிய விதிகளைப் பராமரிப்பதற்குப் பொதுமக்களிடம் ஏற்கெனவே உள்ள 6.44 சதவீத பங்குகள் போக, எஞ்சிய 3.56 சதவீதப் பங்குகளை விற்பனைக்கு அறிவித்தாலே போதுமானதாகும். என்.எல்.சி. பங்குகளைத் தமிழகப் பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கும் பரிவர்த்தனையின் அம்சங்களை இறுதி செய்வதற்கு ஏதுவாக, மத்திய அரசு மற்றும் SEBI அதிகாரிகளை மும்பையில் நாளை மறுநாள் (15.07.2013) தமிழக அதிகாரிகள் குழு சந்தித்துப் பேசவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தப் பேச்சுவார்த்தையில், பங்குகளைத் தமிழகப் பொதுத்துறை நிறுவனங்கள் வாங்குவது மற்றும் பங்குப் பரிவர்த்தனையைச் செயல்படுத்துவது குறித்த விவரங்கள் இறுதி செய்யப்படும் என்று நான் நம்புகிறேன். நெய்வேலியில், தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள போராட்டத்திற்கு விரைந்து தீர்வு காண்பதற்கு இந்த நடவடிக்கை முன்னேற்றமான சூழ்நிலையாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

மேலும், தமிழக அரசு அதிகாரிகள், மத்திய அரசு அதிகாரிகள் மற்றும் SEBI அதிகாரிகள் ஆகியோருக்கு இடையே நாளை மறுநாள் (15.07.2013) என்.எல்.சி. பங்குகளை, தமிழகப் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தை நல்ல முடிவை அளிக்கும் என்பதை எதிர்நோக்கி உள்ளேன்.

இந்தப் பரிவர்த்தனை நடைமுறைகள், விரைந்து நிறைவடையும் என நான் நம்புகிறேன்.

✶ ✶ ✶

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரூ.500 கோடிக்கு என்.எல்.சி.பங்குகள்!

தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த குரலுக்குக் கிடைத்த வெற்றி!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை (15.7.2013)

இந்திய நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கினை வகிப்பதும், தர மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் மேலோங்கி இருப்பதும், தொடர்ந்து இலாபத்தில் இயங்கிக் கொண்டிருப்பதும், இந்திய அரசின் "நவரத்னா" நிறுவனங்களில் ஒன்றாக விளங்குவதுமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், கடந்த 57 ஆண்டுகளாக எரிசக்தித் துறையில் பல்வேறு அளப்பரிய சாதனைகளைப் புரிந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை மத்திய அரசு விற்பனை செய்ய முடிவு எடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கான நிலம் தமிழக மக்களால் வழங்கப்பட்டது. அங்கு பணியாற்றுபவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் தான். இந்த நிறுவனம் தமிழர்களின் உழைப்பால் தான் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகின்றது. கடந்த நிதி ஆண்டில் இந்த நிறுவனம் 1,460 கோடி ரூபாய் அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியிருக்கிறது. தமிழர்களின்

உணர்வுகளோடு இந்த நிறுவனம் ஒன்றிணைந்துள்ளதால் தான் இந்த நிறுவனத்தின் பங்குகளை விற்பதற்கு ஒட்டுமொத்தத் தமிழர்களும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டுமென்ற மத்திய அரசின் கருத்துருவை நான் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளேன். 2003ஆம் ஆண்டு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்த போது, அதனை எதிர்த்து 22.4.2003 அன்று நான் அப்போதைய பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். இதனையடுத்து, இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

தொழிலாளர்களுக்கு ஆதரவு

2006ஆம் ஆண்டு மத்திய அரசு மீண்டும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்ய முயன்ற போது, அதன் தொழிலாளர்கள் என்னை வந்து நேரில் சந்தித்தனர். தொழிலாளர்களின் கோரிக்கைக்கு நான் ஆதரவு தெரிவித்ததோடு, மத்திய அரசின் திட்டத்தை எதிர்த்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழகத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்தத் திட்டத்தை மத்திய அரசு ரத்து செய்தது.

இந்தச் சூழ்நிலையில், நிறுவனத்தை ஏற்படுத்தியவர்கள் அல்லாமல் பொதுமக்களிடம் போதிய அளவு பங்கு இருந்தால் தான் பங்குச் சந்தையில் நீர்மை, அதாவது liquidity இருக்கும் என்பதன் அடிப்படையிலும்; பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின்

பொது முதலீட்டாளர்கள் பங்குகளுக்குரிய நியாயமான விலையைப் பெற இயலும் என்பதன் அடிப்படையிலும்; பங்குகளின் விலையில் செயற்கை மாற்றத்தை எவராலும் உருவாக்க இயலாது என்பதன் அடிப்படையிலும்; பங்குகளின் விலையில் ஏற்படும் மிகுந்த ஏற்ற இறக்கத்தினைத் தணிக்கும் வகையிலும்; தனியார் நிறுவனங்களின் 25 விழுக்காடு பங்குகளும், பொதுத் துறை நிறுவனங்களின் 10 விழுக்காடு பங்குகளும் பொது முதலீட்டாளர்கள் வசம் இருக்க வேண்டும் என 1957ஆம் ஆண்டைய பங்குகள் பரிவர்த்தனைகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் (Securities Contracts (Regulation) Rules, 1957) 2010ஆம் ஆண்டு மத்திய அரசு திருத்தம் கொண்டு வந்தது. பங்குச் சந்தையில் செயற்கை விலை மாற்றத்தை தனியார் நிறுவனங்கள் தான் மேற்கொள்ள இயலும். பொதுத் துறை நிறுவனங்கள் இது போன்ற விலை மாற்றத்தை ஏற்படுத்த இயலாது. எனவே, பொதுத் துறை நிறுவனங்களும் தனது பங்குகளை 90 விழுக்காடாகக் குறைத்துக் கொண்டு, பொது முதலீட்டாளர்கள் வசம் 10 விழுக்காடு பங்குகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்ற இந்தியப் பங்குகள் பரிவர்த்தனை வாரியத்தின் (Securities and Exchange Board of India) கொள்கை தவறானது ஆகும்.

இருப்பினும், இந்த விதியை மேற்கோள் காட்டி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் 5 விழுக்காடு பங்குகளை விற்க மத்திய அரசு முடிவு செய்தது. இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்த உடனேயே, இதனை எதிர்த்து 23.5.2013 அன்று நான் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளிலிருந்து ஒரு சிறிய பகுதியை விற்பனை செய்தாலும் தொழிலாளர் போராட்டம் வெடிக்கும் என்றும், இதன் காரணமாக மின் தடை ஏற்பட்டு தமிழகத்தின் நலன்

பாதிக்கும் என்றும் குறிப்பிட்டு, தற்போது வெளிச்சந்தையில் உள்ள 6.44 விழுக்காடு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் திரும்பப் பெற்று, இந்த நிறுவனம் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதை நிறுத்த வேண்டும் அல்லது 1957 ஆம் ஆண்டைய பங்குகள் பரிவர்த்தனைகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் இருந்து நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்று பாரதப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

இதற்குப் பதில் அளித்து 8.6.2013 அன்று பாரதப் பிரதமர் அவர்கள் எனக்கு ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில், விதிகளைப் பின்பற்றாத தனியார் நிறுவனங்களுக்கு இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியம் அபராதம் விதிப்பதாகவும், இந்த நிலைமைக்குப் பொதுத் துறை நிறுவனங்கள் ஆளாகக் கூடாது என்றும், இந்த நிறுவனத்தின் 5 விழுக்காடு பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் அந்த நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறிவிடாது என்றும், பொதுத் துறை நிறுவனம் என்ற சிறப்பை இழந்துவிடாது என்றும், இது குறித்துத் தொழிலாளர்களின் நம்பிக்கையைப் பெற என்.எல்.சி. நிருவாகம் தொழிற்சங்கங்கள் மற்றும் பணியாளர் சங்கங்களிடையே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், முதலீட்டை அதிகப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்து வருகின்ற இந்தத் தருணத்தில், பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட பொதுத்துறை நிறுவனத்தைப் பங்குச் சந்தைப் பட்டியலிலிருந்து விலக்கிக் கொண்டால், அது பங்குச் சந்தைக்கு எதிர்மறையான சமிக்ஞைகளை அளிக்கும் என்றும் தெரிவித்து, இந்த நிறுவனத்தின் 5 விழுக்காடு பங்குகளை விற்பதைத் தவிர மத்திய அரசுக்கு வேறு வழியில்லை என்றும் தெரிவித்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு மத்திய அரசின் இந்த முடிவிற்கு 21.6.2013 அன்று ஒப்புதல் அளித்தது. இதனை அறிந்தவுடன் 22.6.2013 அன்று பாரதப் பிரதமருக்கு மீண்டும் ஒரு கடிதத்தினை நான் எழுதினேன். அந்தக் கடிதத்தில், அனைத்து தொழிற்சங்கங்களும் மத்திய அரசின் முடிவினை எதிர்த்துப் போராட்டங்கள் மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கின்றன என்று தெரிவித்து, இந்த முடிவினை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரியிருந்தேன். இருப்பினும், மத்திய அரசிடமிருந்து எவ்வித சாதகமான முடிவும் வரவில்லை.

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்க வேண்டும்

இந்தப் பிரச்சினைக்கு சாத்தியமாகக் கூடிய ஒரு தீர்வினைக் காண வேண்டும் என்ற அடிப்படையிலும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தொழிலாளர்களின் உணர்வுகளுக்கும், ஒட்டுமொத்தத் தமிழர்களின் கோரிக்கைக்கும் மதிப்பளிக்காமல் நிதிச் சந்தையின் கருத்தோட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்ததன் காரணத்தாலும், என்.எல்.சி. நிறுவனத் தொழிலாளர்கள் மற்றும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், தமிழக அரசுக்கு ஏற்படும் நிதிச் சுமையையும் பொருட்படுத்தாது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் 5 விழுக்காடு பங்குகளை தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் தகுதி பெற்ற வாங்கும் நிறுவனங்கள்

(Qualified Institutional Buyers) என்றும், அவைகள் வாங்கும் பங்குகள் 'பொது முதலீடு' (Public Holding) என்ற வகைப்பாட்டிற்கு உட்பட்டது என்றும் தெரிவித்து, எனவே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்யாமல், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்க வேண்டும் என்றும் எனது கடிதத்தில் கோரியிருந்தேன்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி **7.7.2013** அன்றும் பாரதப் பிரதமருக்கு ஒரு கடிதத்தை நான் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அளிப்பது குறித்த கருத்துருவை மத்திய அரசு உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்த வழிமுறைகளை வகுக்க இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திற்கு உத்தரவிடுமாறும் பாரதப் பிரதமரை நான் கேட்டுக் கொண்டேன்.

எனது தொடர் வற்புறுத்தலையடுத்து, மத்திய அரசு தமிழக அரசின் கோரிக்கையைப் பரிசீலிக்க முடிவு செய்து, இது குறித்து விவாதிக்க தமிழக அரசின் அதிகாரிகளை புது டெல்லிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழக அரசின் நிதித் துறை முதன்மைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் முதன்மைச் செயலாளர், தொழில் துறையின் இணைச் செயலாளர் ஆகியோர் **10.7.2013** அன்று புதுடெல்லி சென்று மத்திய அரசு அதிகாரிகளுடன் கலந்து உரையாடினர். இந்தக் கூட்டத்தில், பங்குகளை வாங்கும் தகுதியுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையை ஐந்து என நிர்ணயம் செய்யவும்; விற்கப்படும் பங்குகளில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (TIDCO)

25 விழுக்காடு பங்குகள்; தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்கு (SIPCOT) 45 விழுக்காடு பங்குகள்; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், (TIIC) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TUFIDCO) மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (Powerfin) ஆகியவற்றிற்குத் தலா பத்து விழுக்காடு பங்குகள் என்ற அடிப்படையில் ஒதுக்கவும்; பங்குகளின் விலை நிர்ணயத்தைப் பொறுத்தவரையில், தகுதியுள்ள நிறுவனங்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் முறைப்படி, பங்குச் சந்தையின் இரண்டு வார அதிக பட்ச மற்றும் குறைந்தபட்ச விலையின் சராசரியை அடிப்படையாக வைத்து விலையினை நிர்ணயம் செய்யவும், 6.44 விழுக்காடு பங்குகள் ஏற்கெனவே பொது முதலீட்டில் உள்ளதால், 5 விழுக்காடு என்பதற்குப் பதிலாக 3.56 விழுக்காடு பங்குகளை விற்பனை செய்யவும் வலியுறுத்தப்பட்டது.

இது குறித்த வழிமுறைகள் குறித்து இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியம் (SEBI) முன்பு விவாதிக்கும் பொருட்டு, 15.7.2013 அன்று மும்பையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் தமிழக அரசின் நிதித் துறை முதன்மைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் முதன்மைச் செயலாளர், தொழில் துறையின் இணைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நடைபெற்ற விரிவான விவாதத்திற்குப் பிறகு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு விற்பனை செய்யவும், அதனால் பொது வைத்திருப்பாக வகைப்படுத்தப்படும் முதலீடு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவான

10 விழுக்காட்டினை நிறைவு செய்யும் என்பதால் மத்திய அரசும், செபி நிறுவனமும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில்கள் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஆகியவை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை சுமார் 500 கோடி ரூபாய் விலை கொடுத்து வாங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கையின் மூலம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் தனியாருக்கு விற்பனை செய்வது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இது எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணமாகவும், எனது தனிப்பட்ட முயற்சிக்கும், தொழிலாளர்களின் போராட்டத்திற்கும், ஒற்றுமைக்கும், தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த குரலுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும்.

இதனை ஏற்று, அனைத்து NLC தொழிலாளர்களும் தங்களது வேலை நிறுத்தத்தை கைவிட்டு உடனடியாக பணிக்குத் திரும்புமாறு நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

✶ ✶ ✶

மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குப் பாராட்டு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.7.2013 அன்று மாலை மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஒத்துழைப்பு நல்கியமைக்கு தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தத் தொலைபேசி உரையாடலின்போது, செபி நிறுவன அதிகாரிகளுடனும், மத்திய அரசு அதிகாரிகளுடனும் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் 15.7.2013 அன்று மும்பையில் பேச்சுவார்த்தை நடத்தினர் என்றும், மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலையீட்டின் பேரில், அந்தப் பேச்சுவார்த்தையின் இறுதியில் திருப்திகரமான உடன்பாடு ஏற்பட்டது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், இந்த உடன்பாட்டினைத் தொடர்ந்து தான் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையில் போராட்டத்தில்

ஈடுபட்டுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத் தொழிலாளர்கள் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், இந்த வேண்டுகோளினை ஏற்றுத் தொழிலாளர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்புவார்கள் என்று தான் நம்புவதாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமரிடம் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் எடுத்த நடவடிக்கைக்குத் தனது பாராட்டுதலையும், நன்றியினையும் தெரிவித்துக் கொண்டதோடு, தான் எப்போதும் மாநில அரசுடன் இணக்கமான உறவை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

✶ ✶ ✶